## தேசிய கைப்பணிகள் மன்றம் - 2015

---

தேசிய கைப்பணிகள் மன்றத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 1982 இன் 35 ஆம் இலக்க தேசிய கைப்பணிகள் மன்றத்துடன் இணைந்த அதிகாரச்சட்டத்தின் 84(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் மன்றத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று மன்றத்தின் தலைவருக்கு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள்

கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய கைப்பணிகள் மன்றத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நடைமுறையல்லாச் சொத்தாகக் காண்பிக்கப்பட்ட ரூபா 772,735 பெறுமதியான நூலகப் புத்தகங்களுக்கான பெறுமானத்தேய்வு கொள்கை தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசாங்க மானியத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 99,460,609 தொகையான நடைமுறையல்லாச் சொத்துக்கள் வருடாந்தம் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தும் அதற்குரிய பெறுமானத்தேய்வை காலக்கழிவாக பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.2. கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டிற்குரியதாக இனங்காணப்பட்ட வரவுகள் மற்றும் செலவுகள் முறையே ரூபா 590,754 மற்றும் ரூபா 57,267 தொகைகள் மீளாய்வாண்டின் நானாவித வருமானம் மற்றும் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தவேண்டிய கணக்காய்வுக் கட்டணம் ரூபா 97,385 தொகை குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) கணிப்பீட்டு வழுவின் காரணமாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பணிக்கொடை ஒதுக்கீடுகள் ரூபா 255,007 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) சேவையிலிருந்து விலகிச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களுக்கு செலுத்தவேண்டிய பணிக்கொடைப் பணத்தைக் கணிப்பீடு செய்யும் போது கூட்டுமொத்தமாக ரூபா 662,564 தொகை குறைவாகக் கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சலைக் கணிப்பீடு செய்யும்போது அட்டுறு செலினங்களில் ஏற்பட்ட ரூபா 1,294,550 தொகையான வேறுபாடு மற்றும் பொது வைப்புக்களில் இடம்பெற்ற ரூபா 55,000 தொகையான வேறுபாடுகள் சீராக்கம் செய்யப்படாதிருந்ததுடன் ஏனைய நடைமுறைச் சொத்துக்களிலிருந்து இடம்பெற்ற வேறுபாடு ரூபா 1,172,638 தொகை மற்றும் பெறவேண்டிய கணக்குகளில் இடம்பெற்ற வேறுபாடு ரூபா 634,789 தொகை என்பன அதிகரித்து சீராக்கம் செய்யப்பட்டிருந்தது.

(ஊ) இலங்கை கைப்பணிகள் சபையினால் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது சட்டரீதியாக கைப்பணிகள் மன்றத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த 03 வாகனங்கள் மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் ரூபா 2,800,000 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக இருப்பு மெய்மையாய்வு தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மெய்மையாய்வுச் சபை அறிக்கையின் பிரகாரம் நிறுவனத்தின் 13 பிரிவுகளுக்குரிய மெய்மையாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் பல்வேறு பொருள் வகைகளில் கணிசமான அளவில் பெறுமதி குறிப்பிடப்படப்படாமையினால் மொத்த இருப்பு பெறுமதியில் அந்த பொருட்களின் கிரயம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) தலைமை அலுவலகம், கோட்டை கைப்பணி விற்பனைக் கூடம் மற்றும் மொலகொட கைப்பணி விற்பனைக் கூடம் என்பவற்றில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 106 விடயங்களில் இருப்புப் பற்றாக்குறை மெய்மையாய்வுச் சபையினால் இனங்காணப்பட்டிருந்த போதிலும், அந்த இருப்பு பற்றாக்குறையின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) பாவனைக்கு எடுக்கமுடியாத தகைமை அலுவலகத்தின் ரூபா 136,487 தொகையான காகிதாதிகள் இருப்பு கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(iv) மெய்மையாய்வுச் சபையினால் 03 பிரிவுகளின் 15 வகைகளுக்குரிய பொருட்களில் மிகையான இருப்பு இனங்காணப்பட்டிருந்த போதிலும், இந்த மிகை இருப்பு கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 04 வங்கி நடைமுறைக் கணக்குகளுக்குரிய ரூபா 855,036 கூட்டுத்தொகையான இனங்காணப்படாத செலவு மற்றும் 02 வங்கி நடைமுறைக் கணக்குகளுக்குரிய ரூபா 166,924 கூட்டுத்தொகையான இனங்காணப்படாத வரவு என்பவற்றை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) கைப்பணிகள் அபிவிருத்தி நிதிய வங்கி நடைமுறைக் கணக்கில் 2012, 2013 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது வைப்புச் செய்யப்பட்ட ரூபா 159,895 கூட்டுத்தொகையான வைப்புப் பணத்தை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பேரேட்டுக் கணக்கின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நானாவித முற்பணக் கணக்கின் மீதி ரூபா 927,647 ஆக இருந்த போதிலும், முற்பண பட்டோலையின் பிரகாரம் அந்த மீதி ரூபா 1,286,785 ஆனமையால் ரூபா 359,138 வேறுபாடொன்று காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட 07 நிலையான சொத்துக் கணக்குகளுக்குரிய மீதிகளை நிலையான சொத்துக்கள் பதிவேட்டுடன் ஒப்பிடும் போது ரூபா 27,071,449 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கீழே குறிப்பிடப்படுகின்ற கணக்குகளின் எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| மோட்டார் வாகனம் | 10,562,498 | 14 வாகனங்கள் தொடர்பாக மெய்மையாய்வுச் சபை அறிக்கை |
| கடன்கொடுத்தோர் | 273,975 | மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் |

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 2,660,038 கூட்டுத்தொகையான வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகளில் 01 வருடத்திற்குக் குறைவான கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 180,500 ஆகவும், 01 வருடம் முதல் 2 வருடங்கள் வரையிலான கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,432,122 ஆகவும், 3 வருடங்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட பழைய கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 47,416 ஆகவும் இருந்ததுடன் இந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 3,405,298 கூட்டுத்தெொகயான வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளில் 01 வருடத்திற்குக் குறைவான கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 932,790 ஆகவும், 01 வருடம் முதல் 02 வருடங்கள் வரையான கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 200,000 ஆகவும், 03 வருடங்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட பழைய கடன் மீதிகளின்

கூட்டுத்தொகை ரூபா 2,272,508 ஆகவும் இருந்ததுடன் இந்த நிலுவைக் கடன் மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) முற்பணக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 359,137 தொகையான தொங்கல் மீதிகளை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கைப்பணிகள் மன்றத்தினால் சனாதிபதி செயலகத்திற்கு 10 புத்தர் சிலைகள் 2014 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காகக் கிடைக்க வேண்டிய ரூபா 345,750 கூட்டுத்தொகையை சனாதிபதி அலுவலகத்திலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது கீழே காண்பிக்கப்படுகின்ற சட்டங்கள், விதிகள். பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1983 இன் 13 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு அதிகாரச்சட்டம் | ஊழியரொருவர் ஓய்வுபெற்றுச் சென்ற திகதியிலிருந்து 30 தினங்களுக்குள் பணிக்கொடைப் பணம் செலுத்த வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது ஓய்வுபெற்றுச் சென்ற 06 ஊழியர்களுக்குச் செலுத்தும் போது அந்த கால எல்லையை விஞ்சி கொடுப்பனவுகள் தாமதித்துச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 12.2.6 ஆம் பிரிவு | அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்படாமல் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு பதில் கடமை சம்பளமாக ரூபா 97,575 தொகை ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| | (i) நிதிப்பிரமாணம் 371(2) | செயல்நிமித்த உப கட்டுநிதி அது வழங்கப்பட்ட செயற்பாடு நிறைவுபெற்றதும் உடனடியாக தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 1993 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலத்தில் வழங்கப்பட்ட ரூபா 1,286,785 கூட்டுத்தொகையான முற்பணத்தைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நிதிப்பிரமாணம் 396(ஈ) | 06 மாதங்களை விஞ்சிய ரூபா 69,683 கூட்டுப்பெறுமதியான 27 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (iii) | நிதிப்பிரமாணம் 756(1) | 2015 ஆம் ஆண்டிற்கான மெய்மையாய்வுச் சபை நியமித்தல் 2016 மார்ச் 14 ஆந் திகதி வரை தாமதிக்கப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.6 ஆம் பிரிவு | செயலாற்றல் அறிக்கை பணிப்பாளர் சபையினால் மீளாய்வு செய்யப்பட்டு காலாண்டு முடிவடைந்து 30 நாட்கள் கழிவதற்கு முன்னர் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கும் பொதுத் திறைசேரிக்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

## 2.5 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ஆ) அங்கீகரிக்கப்படாத நாட்குறிப்பின் மூலம் ரூபா 5,227,905 அட்டுறு செலவினம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) ஊழியர் கடன் பட்டோலையில் 2015 சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 104,050 தொங்கல் மீதியில் ரூபா 88,300 தொகை முறையான அங்கீகாரமின்றி திரண்ட நிதியக் கணக்கில் பதிவழிக்கப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 12,226,762 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னயை ஆண்டின் பற்றாக்குறை ரூபா 4,035,819 ஆனமையால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 8,190,943 தொகையான வீழ்ச்சியொன்று காணப்பட்டது. கைப்பணிகள் மன்றத்தின் மொத்த வருமானம் 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 3,517,643 இனால் வீழ்ச்சியடைந்தமை மற்றும் மன்றத்தின் மொத்தச் செலவினம் ரூபா 4,673,300 இனால் உயர்வடைந்தமை மேற்கூறப்பட்ட வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்தபோது 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக நிதிப் பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஊழியர் ஊதியம், அரசாங்க வரி மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கவனத்தில் கொள்ளும் போது தேசிய கைப்பணிகள் மன்றத்தின் பங்களிப்பு 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 67,404,637 ஆக இருந்ததுடன் அது தொடர்ந்து அதிகரித்து மீளாய்வாண்டின் போது ரூபா 133,765,748 ஆக இருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

2014 ஆம் ஆண்டினை விட 2015 ஆம் ஆண்டின் போது கைப்பணி அபிவிருத்தி மற்றும் நலன்புரி நடவடிக்கைகளுக்காக 25.55 சதவீதம் செலவிடப்பட்டிருந்ததுடன் அனுசரணைப்

பணப் பெறுவனவு குறைவடைந்ததன் அடிப்படையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கண்காட்சிகள் மற்றும் மாநாடுகளுக்காக செலவிடப்பட்ட செலவினம் மீளாய்வாண்டின் போது 88.07 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

கைப்பணிக் கைத்தொழில் பொருட்களை மேம்படுத்துதல், அபிவிருத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்தல் தொடர்பாக ஆலோசனை வழங்குவதும், உதவுதலும், கைப்பணி உற்பத்தியை விரிவுபடுத்துதல் மற்றும் பூர்த்திப் பொருட்களின் தரம் மற்றும் நியமங்களை அபிவிருத்தி செய்தல் கைப்பணியாளர்களைப் பயிற்றுவிக்கும் செயற்பாடுகளுக்காக நிலைய வேலைத்தளங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களைத் தாபித்தல், பராமரித்தல் மற்றும் செயற்படுத்துதல், இலங்கையிலும் வெளிநாடுகளிலும் கண்காட்சிகளை நடாத்துதல், கைத்தொழில்களுக்குத் தேவையான உள்நாட்டு மூலப் பொருட்கள் கிடைக்கச் செய்வதன் மூலம் கைத்தொழிலாளர்களின் உற்பத்தியை கட்டியெழுப்புதல் இந்த மன்றத்தின் பிரதான நோக்கங்களாகும்.

மேற்பகூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுதல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடந்த ஐந்து வருட காலத்தில் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட பல்வேறு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கையை பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பீடு செய்த போது 2011 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் வரை பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கையும் பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கையும் கிரமமாக உயர்வடைந்திருந்த போதிலும் 2014 ஆண்டிற்கு ஒப்பாக 2015 ஆம் ஆண்டின் போது பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 27.31 சதவீதத்தாலும், பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை 29.85 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்திருந்தது.

(ஆ) பயிற்சி நிலையங்களின் மூலம் முழுநேரப் பயிற்சி பெற்ற பயிலுனர்களின் எண்ணிக்கையை 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் 13.79 சதவீத்தால் உயர்வடைந்திருந்ததுடன், அதன் பிரகாரம் பயிற்சி நிலையங்களின் மூலம் முழுநேர பயிலுனர்களைப் பயிற்றுவித்தலில் அதிகரிப்பொன்று இடம்பெற்றிருந்தது.

(இ) 2011 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான 04 வருடகாலப்பகுதியில் சந்தை மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள், போட்டி மற்றும் கண்காட்சிகளை நடாத்தும் செயல்முன்னேற்றம் சீராக அதிகரித்திருந்ததுடன், 2014 ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் அந்த நிகழ்ச்சித்திட்டங்களில் முன்னேற்றமொன்று ஏற்பட்டிருக்கவில்லை.

(ஈ) கைப்பணி கிராம அபிவிருத்திக்காக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 33,203,728 தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் 2015 ஆம் ஆண்டின் போது அந்த செயற்பாடுகளுக்காக நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டில் ஏனைய வருமானங்கள் 69.23 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. காலி விற்பனைக் கடை மூடப்பட்டமையின் அடிப்படையில் 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டில் கைப்பணி நிதியத்திற்கான பெறுவனவுகள் 78.7 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன் 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டில் அனுசரணைப் பணப் பெறுவனவு குறைவடைந்தமையின் அடிப்படையில் வெளிநாட்டுக் கண்காட்சிகள் மற்றும் பங்களிப்பு நிகழ்ச்சித் திட்டங்களிலிருந்து கிடைத்த வருமானம் 79.58 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 07 பிரதான செயற்பாடுகளின் செயல்முன்னேற்றம் 50 சதவீதத்திற்கு குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன், மூலப் பொருட்களைப் பயிரிடல் மற்றும் பகிர்ந்தளித்தலுக்காக வசதிகளை வழங்குதல், கைப்பணிப் பொருள் உற்பத்தி மற்றும் விற்பனைக் கிராமங்களைத் தாபித்தல், கைப்பணியாளர்களுக்காக வெளிநாட்டுப் பயிற்சிகளை வழங்குதல் மற்றும் காவன்திஸ்ஸபுற உற்பத்தி மற்றும் விற்பனைக் கிராமத்தில் விஷேட விற்பனை மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் போன்ற 04 பிரதான பணிகள் 2015 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 மே மாதத்தில் இத்தாலியின் ''எக்ஸ்போ மிலானோ'' 2015 இன் நிகழ்ச்சித்திட்டத்திற்கு பங்குபற்றுவதற்காக விண்ணப்பித்த கைப்பணிக் கைப்பணியாளாரால் ரூபா 56,000 செலவில் தமது விமானப் பயணச்சீட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் உரிய கால எல்லையில் வீசா பெற்றுகொள்வதற்குத் தேவையான பரிந்துரைகளை விரைவாகப் பெற்றுக்கொள்வதற்கு தவறியமையின் காரணமாக கைப்பணியாளருக்கு அந்த நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றுவதற்கு முடியாமல் போயிருந்தது. அதன் பிரகாரம் கைப்பணியாளரினால் செலுத்தப்பட்ட விமானப் பயணச்சீட்டுக் கட்டணம் கைப்பணிகள் மன்றத்தால் கைப்பணியாளருக்குச் செலுத்தவேண்டி ஏற்பட்டிருந்தது.

(ஆ) கைப்பணிகள் மன்றத்தின் மூலம் கைப்பணியாளர்களை ஊக்குவிப்பதற்காக நிறைவேற்றப்பட்ட தேசிய கைப்பணிக் கைத்தொழில் போட்டி மற்றும் கண்காட்சிக்காக கைப்பணியாளர்கள் சமர்ப்பித்திருந்த பல்வேறு ஆக்கங்கள் காணாமல் போயிருந்தமை மற்றும் உடைந்து அழிவடைந்த சந்தர்ப்பம் அவதானிக்கப்பட்டதுடன், அவற்றைப் பாதுகாப்பதற்கு போதியளவானதும் முறையானதுமாக திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) யாழ்ப்பாணத்தில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட கைப்பணிகள் உற்பத்தி மற்றும் விற்பனைக் கிராமத்தின் நிர்மாண நடவடிக்கைகளுக்காக 30 வருட குத்தகைக் காலத்தில் அரசாங்கத்தின் காணியொன்று குத்தகை அடிப்படையில் பெறப்பட்டிருந்த போதிலும், அந்த நீண்டகால பிணைமுறிக்காக குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. இந்த பிணைமுறியை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்காக மீளாய்வாண்டிற்காகச் செலுத்த வேண்டிய ரூபா 96,000 தொகையான குத்தகைப் பணம் 2016 நவம்பர் வரை செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் 99 வருட குத்தகை அடிப்படையில் மன்றத்திற்குக் கையளிக்கப்பட்ட பத்தரமுல்லை, தலங்கம இல் அமைந்துள்ள காணியில் காணப்பட்ட கட்டிடத்தை உடைத்து புதிய கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் இந்தக் காணியின் எல்லையினை சரியாக இனங்கண்டு தீர்வு காண்பதற்கு முகாமைத்துவத்தால் 2016 ஆகஸ்ட் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சீகிரிய கைப்பணிக் கிராமத்தில் அமைந்துள்ள 1.1165 ஹெக்டேயர் அளவான காணியை கைப்பணிகள் மன்றத்திற்கு கையளிப்பதற்காக உரிய சான்றிதழ் கையொப்பமிடப்பட்டு 2013 ஏப்ரல் 18 ஆந் திகதி தம்புள்ளை பிரதேச

செயலகத்திற்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் இந்தக் காணியைக் கையேற்கும் நடவடிக்கைகள் 2016 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) இந்திய அரசாங்கத்தின் நிதி அனுசரணையின் கீழ் அம்பாந்தோட்டை காவன்திஸ்ஸபுறயில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட கைப்பணிகள் உற்பத்தி மற்றும் விற்பனைக் கிராமம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) உற்பத்தி மற்றும் விற்பனைக் கிராமத்தை நிர்மாணிப்பதற்காக 2013 ஒக்தோபர் 29 ஆந் திகதி முதல் 30 வருட காலத்திற்காக 1.6187 ஹெக்டேயர் காணியொன்று குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2016 யூலை 31 ஆந் திகதி வரையிலும் தீர்மானிக்கப்பட்ட குத்தகை மற்றும் தவணைப் பணம் என்பவற்றைச் செலுத்தி பிரதேச செயலாளரிடமிருந்து உரித்தினை முறைப்படி கையேற்கப்பட்டிருக்கவில்லை.

(ii) உத்தேசிக்கப்பட்ட கிராம செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகளுக்காக உரிய ஒப்பந்தம் இந்திய அரசினால் 2013 யூலை 17 ஆந் திகதி உள்நாட்டு ஒப்பந்தக்காரரொருவருக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிர்மாணங்கள் 2014 யூன் 30 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், ஒப்பந்தக்காரர் உரிய பிரகாரம் நிர்மாண நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்யாமையின் காரணமாக உரிய செயற்திட்டத்தின் நிர்மாணச் செயற்பாடுகள் 2016 யூலை 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 4.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

சீகிரிய கைப்பணிக் கிராமத்தில் கட்டிடமொன்றும் 12 விற்பனைக் கூடாரங்களும் வருடமொன்றிற்கு மேற்பட்ட காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

## 4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

இந்தியாவின் பெங்களூரில் முதல் தடவையாக நடைபெற்ற கைப்பணிகள் கண்காட்சிக்காக அந்த கண்காட்சியின் நலன்கள் தொடர்பாக முழுமையான பகுப்பாய்வின்றி 13 கைப்பணியாளர்கள் கைப்பணிகள் மன்றத்தின் மூலம் பங்குபற்றச் செய்யப்பட்டிருந்தனர். கண்காட்சி வெற்றியளிக்காமையின் காரணமாக பங்குபற்றிய கைப்பணியாளர்களின் விமானப் பயணச்சீட்டிற்காக செலவிடப்பட்ட பணத்திலிருந்து அரைவாசியான ரூபா 211,250 கைப்பணியாளர் மன்றத்தினால் கைப்பணியாளர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்ததுடன் இந்தக் கண்காட்சிக்காக கைப்பணிகள் மன்றம் செலவிட்ட ரூபா 347,862 கூட்டுத்தொகையான செலவினம் சிக்கனமற்ற செலவினமாக இருந்தது.

## 4.5 இனங்காணப்பட்ட நட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கைப்பணிகள் மன்றத்தின் விற்பனைக் கடையொன்றினதும், மூன்று பிரதேச பயிற்சி நிலையங்களினதும் மின்சாரப்பட்டியல் மற்றும் நீர்ப் பட்டியல்கள் உரிய பிரகாரம் செலுத்தப்படாமையினால் மின்சாரம் மற்றும் நீர் துண்டிக்கப்பட்டிருந்ததுடன் அந்தச்

சேவைகளை சரியான நிலைக்குக் கொண்டுவருவதற்காக ரூபா 2015 ஆம் ஆண்டில் கூட்டுமொத்தமாக ரூபா 33,872 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) கைப்பணி 2014, தேசிய கைப்பணிக் கைத்தொழில் போட்டி மற்றும் கண்காட்சி 2015 ஆம் ஆண்டின் போது பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடாத்தப்பட்டிருந்தது. அந்த கண்காட்சி மற்றும் போட்டிக்காக 04 கைப்பணியாளர்கள் சமர்ப்பித்த வடிவமைப்புக்கள் தொலைந்து போயிருந்தமையினால் அந்த வடிவமைப்பாளர்களுக்கு கூட்டுமொத்தமாக ரூபா 31,600 தொகை மன்றத்தினால் செலுத்தப்பட்டிருந்தது.

**4.6 முறைப்படி கையேற்கப்படாத காணிகள்/ ஆதனங்களில் செயற்திட்டங்களை ஆரம்பித்தல்**

---------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நீண்ட காலமாக பயிற்சி நிலையமொன்று நடாத்திச் செல்லப்பட்ட கைப்பணிகள் மன்றத்திற்கு கைப்பணிக் கைத்தொழில் சபையிலிருந்து சட்ட ரீதியாக கையேற்கப்படாத 07 கைப்பணி பயிற்சி நிலையங்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக 2015 ஆம் ஆண்டின்போது ரூபா 1,414,227 தொகை மன்றத்தின் மூலம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கல்வி அமைச்சிற்குரிய பொல்கொல்ல கைப்பணி செயற்திட்ட வளவில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மற்றும் கைப்பணிகள் மன்றத்திற்கு சட்டரீதியாக உரித்தற்ற மத்திய மாகண அலுவலகக் கட்டிடத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளுக்காக 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 1,529,385 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**4.7 பதவியணியினர் நிர்வாகம்**

----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கைப்பணிகள் மன்றத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 262 ஆகவும், உள்ளபடியான பதவியணியினர் 239 ஆகவும் இருந்தமையால் இரண்டாம் நிலையில் 06 பதவியணியினரும், மூன்றாம் நிலையில் 22 பதவியணியினர்களையும் உள்ளடக்கி 28 பதவியணி வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் ஆரம்ப நிலையில் பதவியணியினரின் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 21 ஆக இருந்த போதிலும், உள்ளபடியான பதவியணியின் 26 ஆனமையால், 05 ஊழியர்களின் மிகையொன்று காணப்பட்டது.

(ஆ) இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலையின் பதவியணியினர்களின் பற்றாக்குறையின் காரணமாக 2014 ஆம் ஆண்டின் போது 120 ஆகக் காணப்பட்ட கைப்பணி பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை 2015 இன் இறுதியில் 112 வரை குறைவடைந்திருந்ததுடன், நிறுவனத்தில் உள்ளகக் கட்டுப்பாடு, வேலைப் பகிர்வு உள்ளகப் பரிசோதனை மற்றும் உள்ளகக் கணக்காய்வு பிரிவு என்பவற்றை வலுபடுத்துவதற்கு போதியளவான பதவியணியினரை ஈடுபடுத்துவதற்கு முடியாதிருந்தது.

(இ) கணக்குகள் மற்றும் கொள்வனவு உத்தியோகத்தர் பதவிகளில் சேவையாற்றிய உத்தியோகத்தர் 2014 பெப்ரவரி மாதத்தின் போது சேவையிலிருந்து இராஜினாமாச் செய்திருந்த போதிலும், அந்தப் பதவிக்காக நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கடந்த 05 வருடங்களில் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை அதிகரித்திருந்ததுடன் மொத்த ஊழியர் கிரயம் 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 62,027,154 தொகை

முதல் 2015 ஆம் ஆண்டு வரையில் ரூப 127,993,035 வரை ரூபா 65,965,881 இனால் அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் ஒரு ஊழியருக்கான சராசரிக் கிரயம் 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 273,247 முதல் 2015 ஆம் ஆண்டளவில் ரூபா 518,190 வரை 89.64 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

### 4.8 வாகனப் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சினால் கைப்பணிகள் மன்றத்திற்கு 2015 யூன் 03 ஆந் திகதி முதல் தற்காலிகமாக இணைக்கப்பட்ட 05 வாகனங்களுக்கிடையே 03 வாகனங்கள் ரூபா 240,500 செலுத்தி பழுதுபார்க்கப்பட்டிருந்ததுடன் எஞ்சிய 02 வாகனங்களும் தற்காலிகமாக இணைக்கப்பட்ட திகதி முதல் ஓட்டத்திற்குத் தகுதியற்ற நிலையில் காணப்பட்டதன் காரணமாக கைப்பணிகள் மன்றத்தின் பிரதான அலுவலகத்தின் வளவில் தரித்து வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மேற்பார்வையின் கீழ் வாகனங்களைக் கைதவிர்க்கும் செயற்பாடுகள் அமுல்படுத்தப்பட வேண்டிய போதிலும், 2014 ஏப்ரல் மாதம் முதல் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட மன்றத்திற்குச் சொந்தமான வேன் வண்டியொன்றைக் கைதவிர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்காமல் விளைவற்ற சொத்தொன்றாக இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பாதுகாப்பற்ற விதத்தில் அலுவலக வளவில் தரித்து வைக்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் 2016 யூன் 06 ஆந் திகதி அதாவது 03 மாத தாமதத்தின் பின்னரே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

கீழே குறிப்பிடப்படுகின்ற அவதானிப்புக்களின் காரணமாக பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(அ) பாதீடு செய்யப்பட்ட மீண்டெழும் செலவினத்தை உள்ளபடியான மீண்டெழும் செலவினத்துடன் ஒப்பீடு செய்த போது 18 தலைப்புக்களில் 14 சதவீதம் முதல் 514 சதவீதம் வரையிலான முரண்கள் காணப்பட்டமை.

(ஆ) பாதீடு செய்யப்பட்ட அபிவிருத்திச் செலவினத்தை உள்ளபடியான அபிவிருத்திச் செலவினத்துடன் ஒப்பிடும் போது 04 நிகழ்ச்சித்திட்டங்களில் 17 சதவீதம் முதல் 180 சதவீதம் வரையிலான முரண்கள் காணப்பட்டமை.

(இ) அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 04 உப நிகழ்ச்சித்திட்டங்களுக்காக கிடைக்கப் பெற்ற கூட்டுமொத்தமான ரூபா 4,475,000 அபிவிருத்தி நிதி ஏற்பாட்டின்

மூலம் செலிவனங்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் அப்பாதீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு 100 சதவீதம் சேமிக்கப்பட்டமை.

**5.3 ஆண்டறிக்கையை சபையில் சமர்ப்பித்தல்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் இறுதியாக கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளுடன் கணக்காய்வு அறிக்கை முன்மொழிகளிலும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2013 இன் ஆண்டறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு 2016 மார்ச் 10 வரை தாமதிக்கப்பட்டிருந்ததுடன் 2014 இன் ஆண்டறிக்கை 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை சபையில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5.4 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 பெப்ரவரி 08 ஆந் திகதிய அமப/2322/349/015 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை கைப்பணிகள் சபையின் கீழ் நாடு முழுவதும் அமைந்துள்ள கைப்பணி பயிற்சி நிலையங்கள் மற்றும் அதன் ஆதனங்கள் தேசிய கைப்பணிகள் மன்றத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் கைப்பணிக் கைத்தொழில் சபையின் கணக்குகளின் பிரகாரம் நிலையங்களுக்குரிய ரூபா 46,000,000 தொகையான சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இந்த சொத்துக்களுக்கிடையே காணப்பட்ட 03 வானகங்களினதும் 69 நிரந்தரக் கட்டிடங்களினதும் சட்டரீதியான உரித்தை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மன்றத்திற்கு கையேற்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் போது கைப்பணிகள் மன்ற வளவில் கைப்பணிக் கிராமத்திற்கு நுழைவதற்காக ரூபா 1,152,902 செலவில் நிர்மாணிக்கப்பட்ட மரப் பாலத்தை திறப்பதற்கு முன்னர், வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக உடைத்து அகற்றப்பட்டிருந்தது. நிதிப் பிரமாணம் 504 இன் பிரகாரம் இந்த சொத்துக்களை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது மன்றத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன், பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) நிதிக் கட்டுப்பாடு | பெறவேண்டிய மீதிகள் அறிவிடப்படாமை, வங்கிக் கணக்கைப் பேணிச் செல்லல் மற்றும் வங்கி இணக்கக்கூற்று தயாரிக்கும் போது தீர்க்கப்படாத மீதி காணப்பட்டமை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | நிலையான சொத்துக் கட்டுப்பாடு | சொத்துப் பதிவேடு உரிய பிரகாரம் பேணப்படாமை மற்றும் மெய்மையாய்வுச் சபை நியமித்தல் மற்றும் மெய்மையாய்வு செய்தல் தாமதமாக மேற்கொள்ளப்பட்டமை. |
| (இ) | களஞ்சியக் கட்டுப்பாடு | களஞ்சியப் பொருட்கள் மற்றும் கண்காட்சிப் பொருட்களின் இறுதியிருப்புக் கட்டுப்பாடு நாளது வரையாக்கப்படாமை. |
| (ஈ) | உள்ளகக் கட்டுப்பாடு | உள்ளக சுற்றறிக்கைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கி அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமை. |